**G.VENKATASWAMY NAIDU COLLEGE (AUTONOMOUS), KOVILPATTI – 628 502.**
(Re-Accredited with 'A' Grade by NAAC | DBT STAR College Scheme)

08.02.2021

**DEPARTMENT OF ELECTRONICS**

<u>சுற்றறிக்கை</u>

நமது கல்லூரியின் மின்னணுவியல் துறை சார்பாக **'எனது கொரோனா காலம்'** என்ற தலைப்பில் துறைகளுக்கிடையேயான (inter-department competition) குறும்பட போட்டி (Short Film) நடைபெற உள்ளது. இப்போட்டியில் பங்குபெற விருப்பம் உள்ள மாணவ மாணவிகள் தங்களது பெயர்களை **10.02.2021**-தேதிக்குள் தங்கள் துறை தலைவர்களிடம் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**<u>குறும்பட போட்டிக்கான விதிமுறைகள்:</u>**

1. ஒரு குழுவில் 5 பேர் இடம்பெறலாம். 5 நபர்களும் தங்கள் பெயர்களை கட்டாயம் பதிவு செய்திருக்க வேண்டும். பெயர்களை பதிவு செய்யாதவர்கள் குறும்படத்தில் நடித்திருப்பின் அத்தகைய குறும்படங்கள் தகுதி நீக்கம் செய்யப்படும்.

2. குறும்படங்கள் இரண்டு முதல் மூன்று நிமிடங்கள் இருத்தல் வேண்டும். (Avoid title cards)

3. ஆபாச வசனங்கள், அங்க அசைவுகள், பெண்களையோ அல்லது தனி நபரையோ இழிவுபடுத்தும் வசனங்கள், காட்சி அமைப்புகள், தனி மனித துதி பாடுதல், ஜாதி மத மொழி இனம் சார்ந்த வசனங்கள், காட்சி அமைப்புகள் இருத்தல் கூடாது.

4. அரசியல் மற்றும் சினிமா சார்ந்த எந்த ஒரு காட்சியும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உங்களது குறும்படத்தில் இடம் பெறுதல் கூடாது. சினிமா அல்லாத பிற இசைகளை உங்களது குறும்படத்தில் பின்னணி இசையாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

5. குறும்படங்கள் முழுக்க முழுக்க உங்களது சொந்த கற்பனையில் உருவானதாக இருக்க வேண்டும். சமுதாயத்திற்கு நல்ல கருத்துகளை எடுத்துரைப்பதாக இருத்தல் வேண்டும்.

6. குறும்படத்திற்காக கல்லூரியில் இருந்து எவ்வித நிதி உதவியும் வழங்கப்படாது. காட்சி அமைப்புக்காக கல்லூரி வளாகத்தை முறையான முன் அனுமதியுடன் பயன்படுத்திக் கொள்ளலாம்.

7. உங்களது சந்தேகங்களுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள உதவி பேராசிரியரை தொடர்பு கொள்ளவும்.

   V.SIVARAMASUBBU, Assistant Professor, Department of Electronics

8. குறும்படங்களை சமர்பிப்பதற்கான கடைசி நாள் 23.02.2021

R. M 8/2/21
**HOD**

**DIRECTOR**

08/02/2021
**PRINCIPAL**